ஓய்வூதியச் சுற்று நிருபம்: 06/2013

எனது இலக்கம்: ஓய்வு/சுற்றுநிருபம்/2013
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
03 -12-2013

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள்,

<u>வழங்கப்படாத ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகைகள்/ மாதாந்த ஓய்வூதியத் தொகைகளை மீளழைத்தல்.</u>

அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஓய்வூதியர்களிடத்தே வழங்கப்படும் ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகை, அவர் இறுதியாகக் கடமை புரிந்த நிறுவனத்திடத்தேயே இத்திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படுகின்றது.

02. அவ்வாறு அனுப்பப்படும் காசோலைகள், பல்வேறுபட்ட காரணங்களினால் நிறுவனங்களின் வைப்புக் கணக்குகளில் தக்க வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் அறியக் கிடைத்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் இக்காசோலைகளை மிக நீண்டகாலம் நிறுவனங்களில் வைத்திருந்ததன் பின்னர் கால எல்லையினை நீடிக்கும் பொருட்டுத் திருப்பியனுப்பப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இவ்வகையில் எவ்வாறானதோர் காரணத்தினதும் அடிப்படையில் தக்க வைத்துள்ள தொகைகளை 31-12-2013 ஆந் திகதிக்கு முன்னர், ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வரையப்பட்ட காசோலையொன்றின் மூலம் இத்திணைக்களத்திடத்தே அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு காசோலைகளை அனுப்புகையில் காசோலையின் பெறுமதியுடன் தொடர்புறும் ஓய்வூதியர்களது தகவல்களை உள்ளடக்கிய ஆவணமொன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. அவ்வாறே பிரதேச செயலாளர்களிடத்தே தக்க வைத்துள்ள கொடுப்பனவு செய்யப்படாத மாதாந்த ஓய்வூதியங்களை, எனது 14-06-2011 ஆந் திகதி கொண்ட சுற்றுநிருபக் கடித அறிவுறுத்தல்களின் அடிப்படையில் உடனடியான ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் காசோலையொன்றினை வரைந்து இத்திணைக்களத்திடத்தே அனுப்புமாறு தொடர்ந்தும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்: எஸ். எஸ். ஹெட்டியாரச்சி,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்.